**சார்பு நீதிமன்றம், ஊத்தங்கரை**

**முன்னிலை:– திரு. பா. திருஞானசம்பந்தம், பி.ஏ., பி.எல்.,**

**சார்பு நீதிபதி, ஊத்தங்கரை.**

**2026–ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 10–ம் நாள் செவ்வாய்கிழமை**

**திருவள்ளுவர் ஆண்டு 2057 விசுவாவசு வருடம் தை 27–ம் நாள்**

**இடை நிலை மனு எண்.02/2025**

**இன்**

**அசல் வழக்கு எண்.271/2023**

ராஜகோபால்

... மனுதாரர் / பிரதிவாதி

**//எதிர்//**

கௌரி

....எதிர்மனுதாரர்/ வாதி

இம்மனு என் முன்பாக இறுதி விசாரணைக்காக வந்தபோது மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. N. கார்த்திகேயன், அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.M. சக்திவேல், அவர்கள் ஆஜராகியும், இரு தரப்பு வாத உரைகளை கேட்டும், ஆவணங்களை பரிசீலனை செய்து, இது நாள் வரையில் இந்நீதிமன்றத்தின் பரிசீலணையில் இருந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்.

**உத்தரவு**

உரிமையியல் நடைமுறைச் சட்டம், கட்டளை 9 விதி 7 பிரிவு 151 –ன் படி இம்மனு தாக்கல்.

**2. மனுதாரரின் மனுவின் சுருக்கம் :–**

மேற்படி வழக்கில் கடந்த 27.03.2025–ம் தேதியில் இந்நீதிமன்றத்தில் ஆஜராகி எதிர்வழக்குரை தாக்கல் செய்ய வாய்தா போடப்பட்டிருந்தது. மேற்படி வாய்தா தேதிக்கு முன்பிருந்தே மனுதாரருக்கு வைரஸ் காய்ச்சல் வந்து மருத்துவ சிகிச்சை பெற்று வந்ததால் மேற்படி வாய்தா தேதியில் மனுதாரரை

இந்நீதிமன்றத்தில் அழைத்தபோது மனுதாரரால் ஆஜராகவும் மனுதாரர் தரப்பில் எதிர்வழக்குரையும் தாக்கல் செய்யவும் இயலவில்லை. அதனால் மனுதாரருக்கு எதிராக ஒருதலைப்பட்சமாக உத்தரவு பிறப்பிக்கப்பட்டுவிட்டது. இது வேண்டுமென்றே ஏற்பட்டதல்ல. மனுதாரருக்கு எதிராக பிறப்பிக்கப்பட்ட ஒருதலைப்பட்ச உத்தரவை ரத்து செய்ய வேண்டியது அவசியமாகிறது. எனவே மேற்படி வழக்கில் கடந்த 27.03.2025–ம் தேதியில் மனுதாரருக்கு எதிராக பிறப்பித்துள்ள ஒருதலைப்பட்ச உத்தரவை ரத்து செய்து உத்தரவிட வேண்டுமென்று இம்மனு தாக்கல்.

**3. எதிர்மனுதாரரின் எதிர் உரையின் சுருக்கம்.**

எதிர்மனுதாரர் தரப்பில் மனுதாரர் / வாதி தாக்கல் செய்துள்ள இந்த மனு சட்டப்படியும், நியாயப்படியும் செல்லத்தக்கதல்ல, இந்த எதிர்மனுதாரர் ஒப்புக்கொண்ட சங்கதிகளை தவிர மற்றவற்றை மனுதாரரே நிரூபிக்க கடமைப்பட்டவர். எதிர்மனுதாரர் எவ்வித பலனையும் விரைவில் அடைந்துவிடக் கூடாது என்ற கெட்ட எண்ணத்தில் மனுதாரர் வேண்டுமென்றே வாய்தா தேதியில் இந்நீதிமன்றத்தில் ஆஜராகாமலும், மனுதாரர் எதிர்வழக்குரை தாக்கல் செய்யாமலும் வழக்கினை ஒருதலைப்பட்ச உத்தரவிற்கு விட்டுவிட்டு இந்த மனுவினை தாக்கல் செய்துள்ளதால் மனுதாரரின் மனு தள்ளுபடி செய்து உத்தரவிடப்பட வேண்டிய ஒன்றாகும். உண்மையில் மனுதாரருக்கு வைரஸ் காய்ச்சல் வந்திருந்தால் மனுதாரர் எந்த மருத்துவமனைக்கு சென்றார் என்றும், எத்தனை நாட்கள் மருத்துவ சிகிச்சை பெற்றார் என்றும், அதற்கான ஆவணங்களையும் தாக்கல் செய்திருப்பார். இதுகுறித்து மனுதாரர் இந்நீதிமன்றத்தில் எந்தவொரு ஆவணமும் தாக்கல் செய்யாமல் இருந்துள்ளதிலிருந்தே மனுதாரரின் மனுவில் சிறிதளவும் உண்மையில்லை என்பது தெளிவாகிறது. அதனால் மனுதாரின் மனு தள்ளுபடி செய்யப்பட வேண்டிய ஒன்றாகும்.

3. மனுதாரர்கள் மற்றும் எதிர்மனுதாரர் தரப்பில் எவ்வித சாட்சியமோ, சான்றாவணமோ முன்னிலைப்படுத்தப்படவில்லை.

4. இம்மனுவின் தீர்மானிக்க கூடிய பிரச்சனை யாதெனில் – மேற்படி மனு அனுமதிக்க கூடியதாஎன்பதே ஆகும் ?

**5.தீர்வு:–**

இருதரப்பு வாதம் கேட்கப்பட்டது. மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் மேற்படி வழக்கில் கடந்த 27.03.2025–ம் தேதியில் இந்நீதிமன்றத்தில் ஆஜராகி எதிர்வழக்குரை தாக்கல் செய்ய வாய்தா போடப்பட்டிருந்தது என்றும், மேற்படி வாய்தா தேதிக்கு முன்பிருந்தே மனுதாரருக்கு வைரஸ் காய்ச்சல் வந்து மருத்துவ சிகிச்சை பெற்று வந்ததால் மேற்படி வாய்தா தேதியில் மனுதாரரை இந்நீதிமன்றத்தில் அழைத்தபோது மனுதாரரால் ஆஜராகவும் மனுதாரர் தரப்பில் எதிர்வழக்குரையும் தாக்கல் செய்யவும் இயலவில்லை என்றும் எடுத்துரைத்தார். ஆனால் கற்றறிந்த எதிர்மனுதாரர் தரப்பு வழக்கறிஞர் எதிர்மனுதாரர் எவ்வித பலனையும் விரைவில் அடைந்துவிடக் கூடாது என்ற கெட்ட எண்ணத்தில் மனுதாரர் வேண்டுமென்றே வாய்தா தேதியில் இந்நீதிமன்றத்தில் ஆஜராகாமலும், மனுதாரர் எதிர்வழக்குரை தாக்கல் செய்யாமலும் வழக்கினை ஒருதலைப்பட்ச உத்தரவிற்கு விட்டுவிட்டு இந்த மனுவினை தாக்கல் செய்துள்ளதால் மனுதாரரின் மனு தள்ளுபடி செய்து உத்தரவிடப்பட வேண்டிய ஒன்றாகும் என்றும், உண்மையில் மனுதாரருக்கு வைரஸ் காய்ச்சல் வந்திருந்தால் மனுதாரர் எந்த மருத்துவமனைக்கு சென்றார் என்றும், எத்தனை நாட்கள் மருத்துவ சிகிச்சை பெற்றார் என்றும், அதற்கான ஆவணங்களையும் தாக்கல் செய்திருப்பார் என்றும், இதுகுறித்து மனுதாரர் இந்நீதிமன்றத்தில் எந்தவொரு ஆவணமும் தாக்கல் செய்யாமல் இருந்துள்ளதிலிருந்தே மனுதாரரின் மனுவில் சிறிதளவும் உண்மையில்லை என்பது தெளிவாகிறது என்றும், அதனால் மனுதாரின் மனு தள்ளுபடி செய்யப்பட வேண்டிய ஒன்றாகும் என்றும் எடுத்துரைத்தார்.

இருதரப்பு வாதுரை மற்றும் சாட்சிய, சான்றாவணங்களை பரிசீலிக்கையில் மனுதாரர் தரப்பில் மேற்படி வழக்கில் இந்நீதிமன்றத்தில் 27.03.2025–ம் தேதியில் மனுதாரர் தரப்பில் எதிர்வழக்குரை தாக்கல் செய்ய வாய்தா போடப்பட்டிருந்தது என்றும், ஆனால் மேற்படி வாய்தா தேதிக்கு முன்பிருந்தே மனுதாரருக்கு வைரஸ் காய்ச்சல் வந்து மருத்துவ சிகிச்சை பெற்று வந்தார் என எடுத்துரைத்திருப்பதை கருத்தில் கொண்டும், இருதரப்பிலும் எடுத்துரைக்கும் வாதுரைகளையும், சாட்சிகளையும் பரிசீலித்து தீர்ப்பு பிறப்பித்தால் தான் அது தகுதி வாழ்ந்ததாகவும் அறுதியானதாகவும் இருக்கும் என இந்நீதிமன்றம் கருதுவதாலும், மனுதாரருக்கு அவரது தரப்பு எடுத்துரைக்க ஒரு வாய்ப்பு வழங்கலாம் இந்நீதிமன்றம் கருதுவதாலும், மேலும் பல வழக்குகள் உருவாவதை தடுப்பதற்காகவும் இம்மனுவை எதிர்மனுதாரின் செலவுத்தொகையுடன் அனுமதிக்க இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

இறுதியாக இம்மனு அனுமதிக்கப்பட வேண்டும் எனில் மனுதாரர் எதிர்மனுதாரருக்கு செலவுத்தொகையாக ரூ.1000/–யை 20.02.2026–க்குள் செலுத்த வேண்டும், தவறும் பட்சத்தில் இம்மனு தள்ளுபடி செய்யப்படும் என்று உத்தரவிடப்படுகிறது. அழைக்க. 20.02.2026.

இந்த உத்தரவு என்னால் நேரடியாக சுருக்கெழுத்து – தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, பின்னர் என்னால் பிழைதிருத்தம் செய்யப்பட்டு இன்று (10.02.2026) இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

THIRUGNANASAMBANDAM P

Subordinate Judge,
Uthangarai.
Digitally signed by THIRUGNANASAMBANDAM P

சார்பு நீதிபதி,
ஊத்தங்கரை.

**1. மனுதாரர் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் :** இல்லை .

**2. எதிர்மனுதாரர் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள் :** இல்லை.

THIRUGNANASAMBANDAM P

Subordinate Judge,
Uthangarai.
Digitally signed by THIRUGNANASAMBANDAM

சார்பு நீதிபதி,
ஊத்தங்கரை.

**IA.02/2025 in**
**OS.No.271/2023**
**Fair / Draft Order**
**Date : 10.02.2026**